[பேரவைத் தலைவர்] [2016 ஜனவரி 23

பின்னர், பேரவை பிற்பகல் 12-31 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

10. 2015 ஆம் ஆண்டு நிருவாக அலுவலர்கள் பணியமர்த்தம் செய்வதற்கான வரைக்கட்டுகள் அடங்கிய விதிகள் இயற்றியது குறித்து சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி4-2) துறையின் 6—11—2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 260—ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

11. (i) 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் மற்றும் சென்னைப் பெருநகர் பரப்பிட நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 23/ 2014) 30-4-2015 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்தும் [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/ 1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1987 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகரப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1987) 18(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] மற்றும் (ii) 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் (கிணறுகள் அமைக்கும் பணியினை முறைப்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு முறைகள்) விதிகள் இயற்றியது குறித்தும் [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின்

(தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10(3) பிரிவு, 2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/2013) 10(3) பிரிவு மற்றும் 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/2013) 10(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி-1) துறையின் 30-4-2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 72-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்.

12. 1988 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகரப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி-1) துறையின் 30-4-2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 74-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகரப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1987) 18(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

13. 1987 ஆம் ஆண்டு சென்னை பெருநகரப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் பிரிவு 8(1)(b)-ல் குறிப்பிட்டுள்ளவாறு காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலுள்ள வருவாய் கிராமங்களுக்கு சம்பந்தப்பட்ட வருவாய் கோட்டாட்சியர்கள் தகுதி வாய்ந்த அதிகாரிகளாக அதிகாரம் வழங்கியது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி-1) துறையின் 30-4-2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 73–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகரப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1987) 18(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[2016 ஜனவரி 23

14. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

15. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

16. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நாற்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

17. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனத்தின் முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

18. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

19. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவஅறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 35(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

3. அவை உரிமைக் குழுவின் அறிக்கை.